

- வாழ்வோம்

`தாய்மாமன் தங்கமோதிரம் திட்டம் - தொலைநோக்கற்ற, பழைமைவாதத்தைத் தூக்கிப்பிடிக்கும் திட்டம்' என விமர்சனம் செய்துள்ளார், வழக்கறிஞர் பாலமுருகன். இது தொடர்பாக அவரது முகநூல் பதிவில்...

``இந்தத் திட்டத்தின் நோக்கம் புரியவில்லை. இதன் நோக்கம் மற்றும் அதன் பின்னணியில் உள்ள சமூகப் பொருளாதாரப் பார்வையை அரசாங்கம் மற்றும் திட்டத்தை உருவாக்கியவர்கள், பொதுச் சமூகத்தின் முன் விளக்குவது அவசியம்.

ஏனெனில், சமூகத் தொலைநோக்குப் பார்வை இல்லாத ஒரு நலத்திட்டம் என்பது, மக்களின் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கான நிரந்தரத் தீர்வைத் தராமல், சமூக சமத்துவத்தை நோக்கமாகக் கொள்ளாமல், தற்காலிக நிவாரணங்களை அல்லது வாக்கு வங்கி அரசியலை மட்டுமே மையமாகக் கொண்டு செயல்படும் திட்டமாக இருக்கும். அதுபோன்ற ஒரு திட்ட மாகவே இது உள்ளது.

சமூகத்தைப் பின்னோக்கி இழுக்கும் திட்டம்!

`தாய்மாமன்' என ஒரு முதல் அமைச்சர் தன்னை இளம் பெண்களிடம் தனிப்பட்ட முறையில் சொல்லிக்கொள்வதில் தவறில்லை. ஆனால், அரசுப் பணத்தில் நடைபெறும் திட்டம், அரசாங்கப் பெயர் கொண்ட திட்டமாக அல்லது பொதுப்பெயர், தலைவர்கள் பெயர் அல்லது முதலமைச்சர் பதவியின் பெயரில் இருக்க வேண்டும். இது, முழுக்க தனிப்பட்ட முறையில் முதல்வர் தங்கமோதிரம் வழங்குவதாக ஒரு தோற்றம், இந்தப் பெயரில் ஏற்படுகிறது.

மேலும், நிலப்பிரபுத்துவச் சமூகத்தின் எச்சங்களை இந்த `தாய்மாமன்' என்ற பதம் தாங்கி நிற்கிறது. பல இளம்பெண்களின் மணத் தேர்வில் தடையாக நிற்பதும், சாதி அடுக்கில் அதன் இறுக்கத்தைக் கட்டிக் காப்பாற்றும் சொல்லாகவும் இந்த `தாய் மாமன்' என்ற சொல்லாடல் உள்ளது. ஒரு சமூகம் முன்னோக்கிச் செல்வதற்குப் பதிலாக, இதுபோன்ற உறவுமுறைச் சொற்கள் அதனைப் பின்னோக்கி இழுப்பதாக உள்ளது.

நிதி நெருக்கடியைக் காரணம் காட்டி, பல கல்வி மற்றும் மக்கள் நலம் சார்ந்த திட்டங்கள் முடக்கப்பட்டுள்ளன. ஆனால், இதுபோன்ற தொலைநோக்குப் பார்வையில்லாத திட்டங்கள், விளம்பரங்கள் ஆகின்றன" என்று குறிப்பிட்டுள்ளார்.

விளம்பரதாரர் ஆட்சியில், விளம்பரதாரர்களுக்கான ஒரு திட்டம் என்றால் மிகையில்லை!

போலி வழக்குகளும்... பொய் வாக்குமூலங்களும்!

சர்க்காரியா கமிஷனின், முதல் அறிக்கையில் பதியப்பட்ட 28 குற்றச்சாட்டுகளில் ஏழு குற்றச்சாட்டுகள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதாக நாடாளுமன்றப் பதிவும் குறிப்பிடுகிறது. ஆனால், அந்த ஏழு குற்றச்சாட்டுகளுக்குள் சில துணைப் பிரிவுகள் இருந்தன. 'டிராக்டர் புகார்' புனையப்பட்டது என்பதை, கடந்த வாரங்களில் பார்த்ததைப்போல, 'பூச்சிக்கொல்லி மருந்து தெளிக்கும் திட்டம்' மற்றும் 'வீராணம் திட்டம்' குறித்தும் போலி வாக்குமூலங்கள் பெறப்பட்டதை, தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளராகப் பணியாற்றிய இராயப்பா அவர்களின் வாக்குமூலம் தெளிவுபடுத்தியது.

குறுக்கு விசாரணையின்போது, அவர் அளித்த வாக்குமூலம் மிகுந்த கவனம் பெற்றது. அவரது பிரமாண வாக்குமூலத்தின் மூலம், தெள்ளத் தெளிவாக எப்படியெல்லாம் வழக்குகள் புனையப்பட்டன என்பதை அறிய முடியும். அவரது வாக்குமூலத்தில், பின்னணியில் இயங்கிய அதிகாரிகளின் பெயர்களையும் குறிப்பிட்டிருப்பார்.

கீழ்க்கண்டவை, இராயப்பா தனது வாக்குமூலமாகப் பதிவுசெய்துள்ளவை.

"சர்க்காரியா விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்ட பிறகு, சி.பி.ஐ. அதிகாரியான சிவாஜி என்பவர், திருவண்ணாமலையில் உள்ள எனது விவசாயப் பண்ணையில் என்னைச் சந்தித்து, சி.பி.ஐ. மூத்த அதிகாரிகளில் ஒருவரான ராஜகோபாலன், கருணாநிதி மீதும் இதர அமைச்சர்கள் மீதும் உள்ள குற்றச்சாட்டுகள் குறித்து, என்னிடம் விவாதிக்க விரும்புவதாகத் தெரிவித்தார். என்னிடம் விவாதங்கள் நடத்தவேண்டிய அவசியம் இல்லை என்றும் ஃபைல்களில் நான் எழுதியிருக்கும் குறிப்புகளையும், சுப்ரீம் கோர்ட்டில் நான் தாக்கல் செய்திருக்கும் பிரமாண வாக்கு மூலத்தையும் அவர்கள் படித்துத் தெரிந்து கொள்ளலாம் என்றும் கூறினேன். அதற்குப் 10 நாட்களுக்குப் பிறகு, முன்கூட்டியே என்னிடம் தெரிவிக்காமல், அந்த ராஜ கோபாலன் திருவண்ணாமலையில் என்னை வந்து சந்தித்தார். நான், முன்பு சிவாஜியிடம் கூறியதையே அவரிடமும் திரும்பச் சொன்னேன்.

சில வாரங்களுக்குப் பிறகு, எஸ்.எஸ். எம்.சுப்ரமணியம் என்னிடம் தொலைபேசி மூலம் பேசினார். சுப்ரீம் கோர்ட்டில் வழக்காடுவதற்காக, 1972-இல் அவரிடம்தான் நான் சென்னையில் உள்ள என் பங்களாவை விற்றேன்.

நான் உடனே சென்னைக்கு வரவேண்டு மென்றும்; சர்க்காரியா சொல்கிறபடி, ஒரு வாக்குமூலத்தில் நான் கையெழுத்துப் போட்டு, கமிஷன் குற்றச்சாட்டுகள் குறித்து, ஐ.ஜி.யான லட்சுமிநாராயணன் சொல்வதைக் கேட்க வேண்டும் என்றும் அரசாங்கத்திட மிருந்து பென்ஷனும் இதர வசதிகளும் கிடைக்க லட்சுமிநாராயணன் உறுதி அளித்திருப்பதாகவும் அவர் கூறினார். 'லட்சுமிநாராயணனைச் சந்திக்க நான் அக்கறை கொண்டிருக்கவில்லை' என்று தெரிவித்தேன்.

சில வாரங்களுக்குப் பிறகு, எஸ்.எஸ். எம்.சுப்ரமணியம் மறுபடியும் என்னிடம் தொலைபேசிமூலம் பேசினார்.

சி.பி.ஐ. தலைவரது கோபத்திற்கு நான் ஆளாகக் கூடாது என்றும் அவர் சொல்கிறபடி நடக்காவிட்டால், எனக்கு பென்ஷனோ இதர வசதிகளோ கிடைக்காது என்றும் அவர் கூறினார்.

"1976-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1-ந் தேதி, நான் சென்னையில் ஒரு வாடகை வீட்டில் குடிபுகுந்தேன். சர்க்காரியா கமிஷன் தனது விசாரணையைத் துவங்கு வதற்கு முன்பு, சி.பி.ஐ.யில் பணியாற்றும் ஸ்ரீராமுலு என் வீட்டிற்கு வந்தார்.

'ஐ.ஏ.எஸ். அதிகாரி வைத்தியலிங்கம் ஒரு வாக்குமூலம் கொடுத்திருப்பதாகவும் பூச்சிமருந்து தெளிப்பு சம்பந்தமாக ஏக்கருக்கு ரூ.5 வீதம் சிபாரிசு செய்து



ஓவியம் : ரவி பேலட்

76

கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!

ஃபைலைத் தயார் செய்யும்படி என்னிடம் முதலமைச்சர் சொன்னதாகவும், உடனே நான் வைத்தியலிங்கத்திற்கு போன் செய்துவிட்டு, முதலமைச்சர் அங்கீகாரத்திற் காக ஃபைலை நேரடியாக அவருக்கு அனுப்பிவைத்ததாகவும் வைத்தியலிங்கம் அந்த வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளதாக அவர் சொன்னார்.

அந்த அடிப்படையில், ஒரு வாக்குமூலம் டைப் செய்துகொண்டு வந்திருப்பதாகவும், அதில் நான் கையெழுத்துப் போட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். அந்த ஃபைல் விவசாயச் செயலாளர் மூலமாக விவசாய அமைச்சருக்கும் பின்னர், அவர் மூலமாக முதலமைச்சருக்கும் செல்ல வேண்டும் என்று நான் குறிப்பிட்டி ருக்கின்றேனா அல்லது முதலமைச்சருக்கே நேரடியாகச் செல்ல வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறேனா என்று நான் அவரைக் கேட்டேன்.

விவசாயச் செயலாளருக்கு, விவசாய அமைச்சருக்கு - பின்னர், முதலமைச்சருக்கு 'ஃபைல்' செல்ல வேண்டும் என்று நான் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கும்போது; நான் வைத்தியலிங்கத்திற்கு டெலிபோன் செய்து, அவருக்கு ஃபைலை அனுப்பியதாக நான் பொய் சொல்ல வேண்டும் என்று எப்படி எதிர்பார்க்கிறீர்கள் ?- என நான் அவரிடம் கேட்டேன். 'டைப்' செய்யப்பட்ட அந்த வாக்குமூலத்தில் நான் கையெழுத்துப் போட மறுத்துவிட்டேன்.

எனது வாக்குமூலத்தைப் பதிவுசெய்யப் பின்னர் வருவதாகக் கூறிவிட்டு, அவர் உடனே போய்விட்டார். அதன் பிறகு அவர் வரவேயில்லை."

"பூச்சிமருந்து தெளிப்புக் குற்றச்சாட்டு சம்பந்தமாக சர்க்காரியா கமிஷன் தாக்கீதின்படி, நான் 1976 -ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15-ஆம் தேதி, எனது வாக்குமூலத்தை அளித்திருந்தேன். பிறகு, நீதிபதியால் எனது வாக்குமூலத்தின் சில பகுதிகள் நீக்கப்பட்டுவிட்டதாகப் பத்திரிகை களில் படித்தேன். பிறகு, அக்டோபர் 28-ஆம் தேதி, இரண்டாவது வாக்குமூலம் அனுப்பும்படி நான் கேட்டுக்கொள்ளப்பட் டேன். ஆனால், அதில்கூட எனது முந்தைய வாக்குமூலத்தின் சில பகுதிகள் நீக்கப்பட்டது குறித்து தெரிவிக்கப்படவில்லை. அதற்கான காரணங்களும் காட்டப்படவில்லை.

அதற்குச் சில தினங்களுக்கு முன்பு, ஐ.ஜி.லட்சுமிநாராயணன் எனது வீட்டிற்கு வந்து, இன்னொரு வாக்குமூலத்திற்கான நகலைத் தயாரித்துத் தன் கையோடு கொண்டு வந்திருப்பதாகவும்; அவர் தயாரித்துக் கொண்டுவந்திருக்கும் வாக்கு மூலத்தின் நகலை நான் அங்கீகரித்து, அதை அப்படியே சமர்ப்பித்துவிட்டால், என்னுடைய பென்ஷன் கிடைப்பதற்கு உறுதியளிப்பதாகவும் எனது வருங்காலம் பிரகாசமாக இருக்குமென்றும் அவர் சொன்னார்.

'வீராணம் திட்டம் பற்றிய குற்றச்சாட்டு' குறித்து 11.8.76 அன்று, இன்னொரு சி.பி.ஐ. அதிகாரி என் வீட்டிற்கு வந்தார். நான் கையெழுத்துப் போடுவதற்காக டைப் அடித்து ஒரு வாக்குமூலத்தைக் அவர் கொண்டுவந்திருப்பதாகவும் அது, இதர ஆபீஸர்கள் சொன்னதற்கு ஒத்திருப்பதாகவும் அவர் கூறினார். நான் அந்த வாக்குமூலங்களைப் பார்ப்பதற்கும் மறுத்துவிட்டேன்."

இவைதான் இராயப்பாவின் கூற்றுகள். முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட அந்த வாக்குமூலங்களை முழு முற்றாகப் புறக் கணித்து, நீதிமன்றங்களிலும் மக்கள் மன்றங்களிலும் கலைஞர் போராடிக் கொண்டிருந்தார்.

...தொடரும்

● **தமிழ்.கா.அமுதரசன்** ●

ஃப்ளாஷ்பேக்



நெருக்கடி காலத்தில் தலைவரைச் சந்தித்தேன்!



கே.வி. இராமகிருட்டிணன்

1976-ஆம் ஆண்டு நெருக்கடி நிலையின்போது, கோபாலபுரம் இல்லத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றேன். ஜூலை மாதம் 20-தேதி சென்றிருந்தேன். அப்போ தெல்லாம், காவல் கெடுபிடி காரணமாக, தோழர்கள், பார்வையாளர்கள் வருவது குறைவாக இருக்கும். அப்படி ஒரு நேரத்தில் எனக்குக் கிடைத்த வாய்ப்பு. வாழ்நாளெல்லாம் மறக்க முடியாது.

- கே.வி.இராமகிருட்டிணன், தலைமைக் கழகச் சொற்பொழிவாளர், திருமயம், சிவகங்கை மாவட்டம்.

இதுபோன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள்.
அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614,
அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
வாட்ஸ்அப் எண்: 82204-51520 மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

தெரிந்து கொள்வோம்

15-7-1953

டால்மியாபுரம் போராட்டத்தில், கலைஞர் உட்பட 34 பேர் கைதுசெய்யப்பட்டு, அரியலூர் நீதிமன்றம் கொண்டுவரப்பட்டனர். `சட்டப்படி நீங்கள் குற்றவாளிகள்' என்றார் நீதிபதி. `இல்லை, நியாயப்படி நாங்கள் குற்றவாளிகள் அல்லர்' என்றார் கலைஞர். வழக்கில்-கலைஞர், முல்லை சத்தி, கஸ்தூரிராஜ், குழந்தைவேலு, குமரவேல் ஆகியோருக்கு ஐந்து மாதக் கடுங்காவல் தண்டனையும் 35 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது.



Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900